திருமறைப் புத்தகங்கள்

- ஓர் அறிமுகம்



V. வீர சுவாமிதாஸ்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

திருமறைப் புத்தகங்கள்

- ஓர் அறிமுகம்

எழுதியவர்கள் :

V. வீர சுவாமிதாஸ், இயக்குநர், வேதாகம நண்பன்

V. விஜயகலா சுவாமிதாஸ்

வெளியீடு :

வேதாகம நண்பன்

எண்:5/3, வீரசாமி 3வது தெரு,அயனாவரம், சென்னை - 23.

தொலைபேசி : 044-26471115, 98841 20603, 94454 15147

biblefriendministry@gmail.com

நூல் பெயர் : திருமறைப் புத்தகங்கள் - ஓர் அறிமுகம்

ஆசிரியர் : V. வீர சுவாமிதாஸ்

பதிப்பு : மூன்றாம் பதிப்பு, 2016

வெளியீடு : **வேதாகம நண்பன்**

எண்.5/3, வீரசாமி 3வது தெரு,

அயனாவரம், சென்னை - 23.

போன் : 044-26471115, 98841 20603, 94454 15147

biblefriendministry@gmail.com

நன்கொடை ரூ.50/-

அச்சிட்டோர் : யுனைட்டட் பைண்ட் கிராபிக்ஸ்

சென்னை

எமது வெளியீடுகள் :

1.	ஆதியாகமம் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
2.	யாத்திராகமம் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
3.	லேவியராகமம் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
4.	எண்ணாகமம் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
5.	உபாகமம் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
6.	யோசுவா 850 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
7.	நியாயாதிபதிகள் & ரூத் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
8.	1 சாமுவேல் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
9.	2 சாமுவேல் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
10.	1 இராஜாக்கள் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
11.	2 இராஜாக்கள் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
12.	1 நாளாகமம் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
13.	2 நாளாகமம் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
14.	எஸ்றா, நெகேமியா, எஸ்தர் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
15.	யோபு 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
16.	சங்கீதம் 4000 கேள்வி பதில்கள் - பாகம் 1	ரூ. 50/-
17.	சங்கீதம் 4000 கேள்வி பதில்கள் - பாகம் 2	ரூ. 50/-
18.	சங்கீதம் 4000 கேள்வி பதில்கள் - பாகம் 3	ரூ. 50/-
19.	சங்கீதம் 4000 கேள்வி பதில்கள் - பாகம் 4	ரூ. 50/-
20.	நீதிமொழிகள் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
21.	பிரசங்கி, உன்னதப்பாட்டு 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
22.	ஏசாயா 4000 கேள்வி பதில்கள் - பாகம் 1	ரூ. 50/-
23.	ஏசாயா 4000 கேள்வி பதில்கள் - பாகம் 2	ரூ. 50/-
24.	ஏசாயா 4000 கேள்வி பதில்கள் - பாகம் 3	ரூ. 50/-
25.	ஏசாயா 4000 கேள்வி பதில்கள் - பாகம் 4	ரூ. 50/-
26.	ஏரேமியா 4000 கேள்வி பதில்கள் - பாகம் 1	ரூ. 50/-
27.	ஏரேமியா 4000 கேள்வி பதில்கள் - பாகம் 2	ரூ. 50/-
28.	ஏரேமியா 4000 கேள்வி பதில்கள் - பாகம் 3	ரூ. 50/-
29.	ஏரேமியா 4000 கேள்வி பதில்கள் - பாகம் 4	ரூ. 50/-
30.	எசேக்கியேல் 2000 கேள்வி பதில்கள் - பாகம் 1	ரூ. 50/-
31.	எசேக்கியேல் 2000 கேள்வி பதில்கள் - பாகம் 2	ரூ. 50/-
32.	தானியேல் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
33.	ஓசியா, யோவேல் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
34.	மத்தேயு 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
35.	மாற்கு 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
36.	லூக்கா 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-

37.	யோவான் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
38.	அப்போஸ்தலர் நடபடிகள் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
39.	ரோமர் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
40.	1 கொரிந்தியர் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
41.	2 கொரிந்தியர் 800 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
42.	கலாத்தியர், எபேசியர், பிலிப்பிர் 1000 கேள்வி பதில்கள்	ரூ. 50/-
43.	எபிரெயர் கேள்வி பதில்கள்	ரூ. 50/-
44.	வெளிப்படுத்தல் கேள்வி பதில்கள்	ரூ. 50/-
45.	திருமறைப் புத்தகங்கள் - ஓர் அறிமுகம்	ரூ. 50/-
46.	யார் இந்த இயேசு? - விடுதலையாளர்	ரூ. 50/-
47.	Who is this Jesus? - The Liberator	ரூ. 50/-
48.	Pongal - Christian Festival	ரூ. 20/-
49.	The New Testament Chart	ரூ. 20/-
50.	வேதாகம விடுகதைகள் 200 - பாகம் 1	ரூ. 25/-
51.	வேதாகம விடுகதைகள் 200 - பாகம் 2	ரூ. 25/-
52.	வேதாகம விடுகதைகள் 200 - பாகம் 3	ரூ. 25/-
53.	வேதாகம விடுகதைகள் 200 - பாகம் 4	ரூ. 25/-
54.	வேதாகம விடுகதைகள் 200 - பாகம் 5	ரூ. 25/-
55.	வேதாகம விடுகதைகள் 200 - பாகம் 6	ரூ. 25/-
56.	வேதாகம விடுகதைகள் 200 - பாகம் 7	ரூ. 25/-
57.	பெண்கள் விடுகதைகள் 200 - பாகம் 1	ரூ. 25/-
58.	மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்	ரூ. 200/-
59.	The Book of Soul Winners	ரூ.300/-
60.	வில்லியம் கேரி	ரூ. 5/-
61.	தங்க வசன டைரி 2016	ரூ. 15/-
62.	ஜான்பன்யனின் ஜெபம்	ரூ. 25/-
63.	ஏசாயா விளக்கவுரை	ரூ.80/-
64.	சிறிய இறைவாக்கினர்கள் விளக்கவுரை	ரூ.50/-
65.	தூய பவுலடியாரின் சிந்தனைகள்	ரூ.50/-
66.	வட்டத்திற்குள் சிக்கிய வார்த்தைகள்	ரூ.50/-
67.	வேதாகம சொல் அகராதி (தபால் செலவு தனி)	ரூ.100/-

வேதாகம நண்பன்

எண்:5/3 வீரசாமி 3வது தெரு, அயனாவரம், சென்னை - 23.

தொலைபேசி : 044-26471115, 98841 20603, 94454 15147

+917200234145

முன்னுரை

உலகின் மானிடர் அனைவர் கைகளிலும் தவழ வேண்டிய ஓர் ஒப்பற்ற செல்வம் பரிசுத்த வேதாகமம் ஆகும். எந்த ஒரு தனிப்பட்ட இனத்திற்கோ, சமயத்திற்கோ மொழி பேசுகிறவர் களுக்கோ அல்லது தனிப்பட்ட நாட்டினர்க்கோ மட்டும் உரியது என்று பிரித்து பார்க்க முடியாத, பிரிக்க முடியாத ஓர் தனிச்சிறப்புடைய மதிப்புமிக்க நூலே இவ்வேதாகமம் ஆகும்.

ஞானத்தை கண்டடைகிற மனுஷனும் புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள். என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக் கொள் என்று சாலொமோன் ஞானி கூறுகிறார். ஞானம் எது? புத்தி எது? இவைகளை எங்கிருந்து, யாரிடமிருந்து சம்பாதிப்பது ? ஒரே வழி பரிசுத்த வேதாகமம் தான்.

நம்பிக்கையற்றவர்களுக்கு நம்பிக்கையையும், நிம்மதியற்றவர் களுக்கு நிம்மதியையும், வாழ்விழந்தவர்களுக்கு வாழ வழியையும் ஒவ்வொருவரின் வாழ்க்கை சூழ்நிலைக்கேற்ற தீர்வையும் அருளும் சிறந்த புத்தகமே இப்பரிசுத்த வேதாகமம்.

பசியுள்ளவனுக்கு உணவின் அருமை புரியும், தாகமுள்ளவனுக்கு தண்ணீரின் அருமை புரியும். நோயுள்ளவனுக்கு மருந்தின் அருமை புரியும். கடின உழைப்பாளிக்கு பணத்தின் அருமை புரியும். திறமையுள்ளவனுக்கு முயற்சியின் அருமை புரியும். அதுபோலவே வேதாகமத்தை வாசித்து, அனுபவித்தவர்களுக்கே அதன் மகத்துவம் புரியும். கர்த்தம் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள் என்று வேதாகமம் கூறுகிறது. ருசித்துப் பார்ப்பவர்கள் மட்டுமே அதன் உண்மைத் தன்மையை, உயர்ந்த ஞானத்தை பெற முடியும்.

எந்த ஒரு புத்தகத்தையும் அதன் பின்னணி தெரியாமல் படிக்கும் போது அது கூறும் முழுமையான செய்தியை நாம் அடைய முடியாது. எனவே பின்னணியும், சூழ்நிலையும் மிகவும் முக்கியம். வேதாகமத்தைப் படிக்கும் போதும் அதன் பின்னணியைக் கருத்தில் கொண்டு படிப்பதே சிறந்தது, பயன் தரக்கூடியது.

இப்பரிசுத்த வேதாகமத்தை பல ஆசிரியர்கள் பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு கால கட்டங்களில் இறை ஆவியின் ஏவுதலால் எழுதியுள்ளார்கள். இவை யாவும் மானிடர் அனைவரும் நல்வழியில், இறைத்திட்டத்தில் நடக்க வேண்டும் என்பதற்காகவே எழுதப்பட்டது.

கடலில் நீர் வற்றிப்போகலாம், சூரியன் இருள் சூழ்ந்துபோகலாம், வானத்தில் நட்சத்திரங்கள் மறைந்துப் போகலாம். நம்பிக்கைக்குறியவர்களின் வாக்குறுதிகள் சிதறுண்டுபோகலாம். ஆனால் வேதாகமத்தின் வார்த்தைகள் என்றுமே ஒழிந்துப் போவதில்லை.

ஏனெனில் இவை சத்திய வார்த்தைகள். பேதைகளை ஞானிகளாக்கும் வார்த்தைகள். துன்மார்க்கரை சன்மார்க்கராக்கும் வார்த்தைகள். பாவிகளை பரிசுத்தராக்கும் வார்த்தைகள். ஜீவனற்றவர்களை ஜீவனுடையவர்களாக்கும் வார்த்தைகள். நித்தமும் நாம் நடந்து செல்லும் பாதைகளுக்கு வெளிச்சம் காட்டும் வார்த்தைகள்.

விலைமதிக்க முடியாத நம் வாழ்க்கைக்கு விலைமதிப்பற்ற செல்வம் தான் இவ்வேதாகமம். உலகில் அதிகமாக மொழிப் பெயர்க்கப்பட்டு விநியோகிக்கப்படுவதும், உலகில் அதிகமானோர் கைகளில் இருக்கும் ஒரே சிறந்த நூல் இவ்வேதாகமம் ஆகும்.

திருமறை இன்று பெரும்பாலோனோர் கைகளில் இருந்தாலும், திருமறையின் உண்மைத் தன்மையைப் புரிந்து கொண்டு, அனுபவத்தில் ஏற்றுக் கொண்டு, அதன்படி செயல்படுவோர் மிகச் சிலரே. திருமறையைத் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டுமானால், பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு போதிக்கின்ற ஓர் ஆசிரியர் கண்டிப்பாக தேவைப்படுகிறார்.

இப்புத்தகம் அவ்விதமான ஓர் ஆசிரியரைக் கண்டுபிடித்து திருமறையின் ஆழ்ந்த சத்தியங்களைக் கற்றுக் கொள்ள தூண்டும் என நம்புகிறேன். இப்புத்தகம் திருமறையை அதன் பின்னணியோடு படிக்க விரும்புவோர்க்கும், போதிக்க விரும்புவோர்க்கும் வழிகாட்டும் புத்தகமாக அமையும் என்பதற்காகவே எழுதப்பட்டுள்ளது.

எனவே திருமறையின் மேல் பற்றுக்கொண்ட இறைமக்கள் தாங்கள் பயன்படுத்துவதோடு மட்டுமல்லாமல் பிறர் பயன்படுத்த ஊக்கப்படுத்தவும், இது போன்ற பல புத்தகங்கள் வெளிவர உதவவும் அன்பாய் வேண்டிக் கொள்கிறேன்.

இறைப்பணியில்,

V. வீர சுவாமிதாஸ்

பழைய ஏற்பாட்டின் ஆகமங்கள்

1. ஆதியாகமம்
2. யாத்திராகமம்
3. லேவியராகமம்
4. எண்ணாகமம்
5. உபாகமம்
6. யோசுவா
7. நியாயாதிபதிகள்
8. ரூத்
9. I சாமுவேல்
10. II சாமுவேல்
11. I இராஜாக்கள்
12. II இராஜாக்கள்
13. I நாளாகமம்
14. II நாளாகமம்
15. எஸ்றா
16. நெகேமியா
17. எஸ்தர்
18. யோபு
19. சங்கீதம்
20. நீதிமொழிகள்
21. பிரசங்கி
22. உன்னதப்பாட்டு
23. ஏசாயா
24. எரேமியா
25. புலம்பல்
26. எசேக்கியேல்
27. தானியேல்
28. ஓசியா
29. யோவேல்
30. ஆமோஸ்
31. ஒபதியா
32. யோனா
33. மீகா
34. நாகூம்
35. ஆபகூக்
36. செப்பனியா
37. ஆகாய்
38. சகரியா
39. மல்கியா

புதிய ஏற்பாட்டின் ஆகமங்கள்

1. மத்தேயு
2. மாற்கு
3. லூக்கா
4. யோவான்
5. அப்போஸ்தலருடைய நடபடிகள்
6. ரோமர்
7. 1 கொரிந்தியர்
8. II கொரிந்தியர்
9. கலாத்தியர்
10. எபேசியர்
11. பிலிப்பியர்
12. கொலோசெயர்
13. I தெசலோனிக்கேயர்
14. II தெசலோனிக்கேயர்
15. I தீமோத்தேயு
16. II தீமோத்தேயு
17. தீத்து
18. பிலேமோன்
19. எபிரேயர்
20. யாக்கோபு
21. I பேதுரு
22. II பேதுரு
23. I யோவான்
24. II யோவான்
25. III யோவான்
26. யூதா
27. வெளிப்படுத்தின விசேஷம்

ஆதியாகமம்

பொருள்	:	ஆரம்பம்
ஆசிரியர்	:	மோசே
கருப்பொருள்	:	ஆரம்பம்
காலம்	:	– 1804 கி.மு. வரை
எழுதப்பட்ட இடம்	:	மீதியான் தேசம், வனாந்திரம்
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. ஏறத்தாழ 1450 – 1410
மொத்த அதிகாரங்கள்	:	50
முக்கிய அதிகாரம்	:	அதி: 15. ஆபிரகாமுடன் கடவுளின் உடன்படிக்கை
மொத்த வசனங்கள்	:	1533
முக்கிய வசனம்	:	அதி: 1:27, 12:2, 3
முக்கிய நபர்கள்	:	ஆதாம், ஏவாள், நோவா, ஆபிரகாம், சாராள், ஈசாக்கு, ரெபெக்காள், யாக்கோபு, யோசேப்பு, பார்வோன்.
முக்கிய இடங்கள்	:	ஏதேன் தோட்டம், அரராத் மலை, பாபேல், ஊர், ஆரான், சீகேம், சோதோம், கொமோரா, எப்ரோன், பெயெர்செபா, பெத்தேல், எகிப்து.
நூலின் தன்மை	:	சட்ட நூல்

நூலின் உள்ளடக்கம் : கடவுள் உலகத்தையும் மனுக்குலத்தையும் படைத்த விதம், மனுக்குலத்தின் வீழ்ச்சி, துன்பத்தின் துவக்கம், நோவாவின் வாழ்க்கை, பெருவெள்ள வரலாறு, பாபேல் கோபுர வரலாறு, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் வாழ்க்கை வரலாறு, யோசேப்பு அவனுடைய சகோதரர் பற்றிய நிகழ்ச்சிகள், யாக்கோபும் அவன் குடும்பமும் எகிப்து நாட்டில் குடியேறுதல் போன்ற வரலாறுகள் கூறப்பட்டுள்ளது.

யாத்திராகமம்

பொருள்	:	விடுதலைப் பயணம்
ஆசிரியர்	:	மோசே
கருப்பொருள்	:	விடுதலை
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 1804 – 1406.
எழுதப்பட்ட இடம்	:	மீதியான் தேசம், வனாந்திரம்
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. ஏறத்தாழ 1450 – 1406
மொத்த அதிகாரங்கள்	:	40
முக்கிய அதிகாரம்	:	அதி: 12–14. பஸ்கா பண்டிகை
மொத்த வசனங்கள்	:	1213
முக்கிய வசனம்	:	அதி: 3:7, 10
முக்கிய நபர்கள்	:	மோசே, ஆரோன், பார்வோன், எத்திரோ, யோசுவா
முக்கிய இடங்கள்	:	எகிப்து, நைல் நதி, மீதியான், செங்கடல், சீனாய் மலை, சீனாய் மலையடிவாரம்
நூலின் தன்மை	:	சட்ட நூல்
நூலின் உள்ளடக்கம்	:	இஸ்ரயேலர் எகிப்தில்

அடிமைத்தனம், மோசேயின் பிறப்பு, இளமைப் பருவம், கடவுள் மோசேயை அழைத்தல், மோசேயும் ஆரோனும் பார்வோனிடம் விடுதலைக்காக முறையிடுதல், எகிப்தில் 10 வாதைகள், இஸ்ரயேலர் எகிப்தினின்று விடுதலை பெறுதல், பஸ்கா அனுசரித்தல், இஸ்ரயேலரின் பயணம், இஸ்ரயேலரின் முறுமுறுப்பு, 10 கட்டளைகள், வழிபாட்டு ஒழுங்கு முறைகள் ஆகியவை கூறப்பட்டுள்ளது.

லேவியராகமம்

பொருள்	:	ஆசாரியத்துவ சட்டம்
ஆசிரியர்	:	மோசே
கருப்பொருள்	:	பரிசுத்தம்
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 1804 – 1406.
எழுதப்பட்ட இடம்	:	மீதியான் தேசம், வனாந்திரம்
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 1450 – 1410
மொத்த அதிகாரங்கள்	:	27
முக்கிய அதிகாரம்	:	அதி: 16. பாவக் கழுவாய் நாள்
மொத்த வசனங்கள்	:	859
முக்கிய வசனம்	:	அதி: 19:2
முக்கிய நபர்கள்	:	மோசே, ஆரோன், நாதாப், அபியு, எலியேசர், இத்மார்
முக்கிய இடங்கள்	:	சீனாய் மலை
நூலின் தன்மை	:	சட்ட நூல்

நூலின் உள்ளடக்கம் : காணிக்கைப் பலிகளுக்கான சட்டங்கள், ஆரோன் மற்றும் புதல்வர்களுக்கான நெறிமுறைகள், குருக்களின் தூய்மையும் தீட்டும் பற்றிய சட்டங்கள், சுத்திகரிப்பின் நாள், தூய்மையான வாழ்விற்கும் வழிபாட்டிற்குமான சட்டங்கள் போன்றவை தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

எண்ணாகமம்

பொருள்	:	எண்ணிக்கை
ஆசிரியர்	:	மோசே
கருப்பொருள்	:	வனாந்திர யாத்திரை
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 1804 – 1406.
எழுதப்பட்ட இடம்	:	மோவாப் சமபூமி, யோர்தான் அருகே எரிகோ
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 1450 – 1410
மொத்த அதிகாரங்கள்	:	36
முக்கிய அதிகாரம்	:	அதி: 14. இஸ்ரயேலரின்முறையீடு
மொத்த வசனங்கள்	:	1288
முக்கிய வசனம்	:	அதி: 14:22, 23
முக்கிய நபர்கள்	:	மோசே, ஆரோன், மிரியாம், யோசுவா, காலேப், எலியேசர், கோரா, பாலாம்
முக்கிய இடங்கள்	:	சீனாய் மலை, கானான், ஓர் மலை, மோவாப் சமவெளி
நூலின் தன்மை	:	சட்ட நூல்

நூலின் உள்ளடக்கம் : இஸ்ரயேல் மக்களின் முதல் கணக்கெடுப்பு, சட்டங்கள், விதிமுறைகள், இரண்டாம் பஸ்கா, சீனாய் மலை முதல் மோவாபு வரை, மோவாபின் நிகழ்ச்சிகள், பயண நிகழ்ச்சிகளின் சுருக்கம், யோர்தானைக் கடக்கும் முன் கொடுக்கப்பட்ட கட்டளைகள் போன்றவை விவரிக்கப்பட்டுள்ளது.

உபாகமம்

பொருள்	:	இணைச் சட்டம்
ஆசிரியர்	:	மோசே
கருப்பொருள்	:	மீண்டும் சட்டம்
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 1804 – 1406
எழுதப்பட்ட இடம்	:	மோவாப் சமபூமி, யோர்தான் அருகே எரிகோ
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 1450 – 1410
மொத்த அதிகாரங்கள்	:	34
முக்கிய அதிகாரம்	:	அதி: 27. கடவுளின் கட்டளைகள் கற்களில் எழுதப்படல்.
மொத்த வசனங்கள்	:	959
முக்கிய வசனம்	:	அதி: 7:9
முக்கிய நபர்கள்	:	மோசே, யோசுவா
முக்கிய இடங்கள்	:	மோவாப்
நூலின் தன்மை	:	சட்ட நூல்

நூலின் உள்ளடக்கம் : மோசேயின் முதல் மற்றும் இரண்டாம் பேருரைகள் கூறப்பட்டுள்ளது. பத்து கட்டளைகள், சட்டங்கள், நியமங்கள், எச்சரிப்புகள், கானான் நாட்டில் நுழைவதற்கான அறிவுரைகள், உடன்படிக்கையைப் புதுப்பித்தல், மோசேயின் இறுதிமொழிகள், மோசேயின் இறப்பு ஆகியவை கூறப்பட்டுள்ளது.

யோசுவா

பொருள்	:	யெகோவாவே இரட்சிப்பு
ஆசிரியர்	:	யோசுவா
கருப்பொருள்	:	கானானின் மேல் வெற்றி
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 1406 – 1350
எழுதப்பட்ட இடம்	:	கானானில் உள்ள கில்கால்
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 14ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	:	24
முக்கிய அதிகாரம்	:	அதி:24. செக்கேமில் உடன் படிக்கையைப் புதுப்பித்தல்
மொத்த வசனங்கள்	:	658
முக்கிய வசனம்	:	அதி: 1:11
முக்கிய நபர்கள்	:	யோசுவா, ராகாப், ஆகான், பினகாஸ், எலியேசர்
முக்கிய இடங்கள்	:	எரிகோ, ஆய், கெரிசீம் மலை, கிபியோன், கில்கால், சீலோ, சீகேம்
நூலின் தன்மை	:	வரலாற்று நூல்

நூலின் உள்ளடக்கம் : யோசுவா தலைமைப் பொறுப் பேற்றல், கானான் நாட்டைக் கைப்பற்றுதல், இஸ்ரயேலரின் வெற்றிகள், தோல்வியுற்ற மன்னரின் பெயர்கள், நாட்டைப் பங்கிட்டுக் கொடுத்தல், அடைக்கல நகர்கள், யோசுவாவின் இறுதி மொழிகள், செக்கேமில் உடன்படிக்கையைப் புதுப்பித்தல் போன்றவை தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

நியாயாதிபதிகள்

பொருள்	:	நீதித் தலைவர்கள்
ஆசிரியர்	:	சாமுவேல்
கருப்பொருள்	:	தோல்வியும் வெற்றியும்
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 1350 – 1050
எழுதப்பட்ட இடம்	:	பாலஸ்தீனா
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 11ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	:	21
முக்கிய அதிகாரம்	:	அதி: 2. இஸ்ரயேல் ஆண்டவரை விட்டு விலகுதல்
மொத்த வசனங்கள்	:	618
முக்கிய வசனம்	:	அதி: 17:6
முக்கிய நபர்கள்	:	தெபோராாள், கிதியோன், அபிமலேக்கு, யெப்தா, சிம்சோன், தெலீலாள்
முக்கிய இடங்கள்	:	எரிகோ, காசோர், மோரே மலை, சீகேம், அம்மோன் நிலம், திம்னா, காசா, மிஷ்பா, கிபியா
நூலின் தன்மை	:	வரலாற்று நூல்

நூலின் உள்ளடக்கம் : இஸ்ரயேலரின் முரட்டாட்டமான வாழ்வு, தெபோராவின் பாடல், கிதியோனின் வரலாறு, அபிமெலேக்கு, தோலா மற்றும் யாயீரின் வரலாறு, இப்தாவின் வாழ்க்கை, சிம்சோனின் பிறப்பு, இளமைப் பருவம், வெற்றி, தோல்வி, மரணம் என்பன பற்றிய செய்திகள், லேவியரும் அவர் மறுமனைவியைப் பற்றிய வரலாறு, இஸ்ரயேல் மக்களின் போர் போன்றவை விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

ரூத்

பொருள் : அழகு

ஆசிரியர் : அறியப்படவில்லை

கருப்பொருள் : இரத்த சம்பந்தமான மீட்பர்

காலம் : கி.மு. ஏறத்தாழ 1350 – 1050

எழுதப்பட்ட இடம் : பாலஸ்தீனம்

எழுதப்பட்ட ஆண்டு : கி.மு. 10ம் நூற்றாண்டு

மொத்த அதிகாரங்கள் : 4

முக்கிய அதிகாரம் : அதி: 4. ரூத்தின் மறுமணம்

மொத்த வசனங்கள் : 85

முக்கிய வசனம் : அதி: 1:16

முக்கிய நபர்கள் : ரூத், நகோமி, போவாஸ்

முக்கிய இடங்கள் : மோவாப், பெத்லகேம்

நூலின் தன்மை : வரலாற்று நூல்

நூலின் உள்ளடக்கம் : எலிமலேக்கின் குடும்பம், கைம்பெண் ரூத், செல்வந்தர் போவாஸ், ரூத் – போவாஸ் திருமணம் போன்றவை கூறப்பட்டுள்ளது.

I சாமுவேல்

பொருள்	:	கர்த்தரிடத்தில் கேட்கப்பட்டவன்
ஆசிரியர்	:	சாமுவேல், நாத்தான், காத்
கருப்பொருள்	:	ராஜாவின் தலைமையில் இறையாட்சி
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 1350 – 931
எழுதப்பட்ட இடம்	:	பாலஸ்தீனா
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 10ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	:	31
முக்கிய அதிகாரம்	:	அதி:15.அரசர்சவுல் புறக்கணிப்படல்
மொத்த வசனங்கள்	:	810
முக்கிய வசனம்	:	அதி: 8:7, 9
முக்கிய நபர்கள்	:	ஏலி, அன்னாள், சாமுவேல், சவுல், யோனத்தான், தாவீது, கோலியாத்.
முக்கிய இடங்கள்	:	ராமா, சீலோ, கீரியாத், செரீம், மிஷ்பா, கில்கால், வனாந்திரம், காத், கில்போ மலை.
நூலின் தன்மை	:	வரலாற்று நூல்

நூலின் உள்ளடக்கம் : சாமுவேலின் பிறப்பு, அன்னாளின் வேண்டுதல், ஏலியின் பணி, கடவுள் சாமுவேலை அழைத்தல், உடன்படிக்கைப் பெட்டி, சாமுவேலின் ஆட்சி, சாமுவேல்–சவுல் சந்திப்பு, சவுல் அரசராதல், பெலிஸ்தர் மேல் வெற்றி, தாவீது அபிஷேகம், கோலியாத்தை தாவீது கொல்லுதல், தாவீது சவுலிடமிருந்து தப்பி ஓடுதல், நண்பன் யோனத்தான், சவுல் மரணம் போன்றவை கூறப்பட்டுள்ளது.

II சாமுவேல்

பொருள்	:	கர்த்தரிடத்தில் கேட்கப்பட்டவன்
ஆசிரியர்	:	சாமுவேல், நாத்தான், காத்
கருப்பொருள்	:	தாவீதின் அரசு
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 1051 – 931
எழுதப்பட்ட இடம்	:	பாலஸ்தீனா
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 10ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	:	24
முக்கிய அதிகாரம்	:	அதி: 11. தாவீதும் பத்சேபாவும்
மொத்த வசனங்கள்	:	695
முக்கிய வசனம்	:	அதி: 5:12
முக்கிய நபர்கள்	:	தாவீது, உரியா, பத்சேபாள், சாலொமோன், நாத்தான்
முக்கிய இடங்கள்	:	எப்ரோன், எருசலேம், காத், மோவாப், ஏதோம், எப்ராயீம் மலை
நூலின் தன்மை	:	வரலாற்று நூல்

நூலின் உள்ளடக்கம் : அனைத்து இஸ்ரவேலின் மீதும் தாவீதின் ஆட்சி, தாவீதும் பத்சேபாவும், நாத்தான் தீர்க்கதரிசி, தாவீது–அப்சலோம், சீபாவை பற்றிய செய்தி, தாவீது தப்பி ஓடுதல், தாவீதின் வெற்றிப் பாடல், தாவீதின் இறுதிமொழிகள், மக்கள் தொகையைத் தாவீது கணக்கிடல் போன்ற நிகழ்ச்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

I இராஜாக்கள்

பொருள்	:	அரசர்கள்
ஆசிரியர்	:	எரேமியா (அ) தீர்க்கதரிசிகள் குழு
கருப்பொருள்	:	இணைக்கப்பட்ட தாவீதின் அரசு
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 1051 – 586
எழுதப்பட்ட இடம்	:	பாலஸ்தீனம்
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 6ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	:	22
முக்கிய அதிகாரம்	:	அதி: 12. வடகுலங்களின் கிளர்ச்சி
மொத்த வசனங்கள்	:	816
முக்கிய வசனம்	:	அதி: 9:4,5
முக்கிய நபர்கள்	:	தாவீது, சாலொமோன், ரெகோபெயாம், யெரோபெயாம், எலியா, ஆகாப், யோசபேல்
முக்கிய இடங்கள்	:	சீகேம், இஸ்ரயேல், யூதா, எருசலேம், பெத்தேல், தாண், திர்சா, சமாரியா
நூலின் தன்மை	:	வரலாற்று நூல்

நூலின் உள்ளடக்கம் : சாலொமோன் அரசராதல், தாவீதின் இறுதி அறிவுரைகள், தாவீதின் இறப்பு, சாலொமோன் ஞானத்திற்காக மன்றாடல், சாலொமோனின் அரசாட்சி, எருசலேம் கோவில் கட்டுதல், திருக்கோவிலின் அர்ப்பணம், சாலொமோனின் இறப்பு, யூதா–இஸ்ரயேல் பிரிவு, அந்நாடுகளின் அரசர்கள், எலியா தீர்க்கதரிசி, இஸ்ரயேல் அரசன் ஆகாபு போன்ற நிகழ்ச்சிகள் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

II இராஜாக்கள்

பொருள்	: அரசர்கள்
ஆசிரியர்	: எரேமியா (அ) தீர்க்கதரிசிகள் குழு
கருப்பொருள்	: இஸ்ரவேல் மற்றும் யூதா
காலம்	: கி.மு. ஏறத்தாழ 931 – 586
எழுதப்பட்ட இடம்	: பாலஸ்தீனம்
எழுதப்பட்ட ஆண்டு	: கி.மு. 6ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	: 25
முக்கிய அதிகாரம்	: அதி: 25. எருசலேமின் வீழ்ச்சி
மொத்த வசனங்கள்	: 719
முக்கிய வசனம்	: அதி: 17:13, 14
முக்கிய நபர்கள்	: எலியா, எலிசா, சூனேமியாள், நாமான், யோசபேல், எசேக்கியா, யோயாக்கீம், சிதெக்கியா, நேபுகாத்நேச்சார்.
முக்கிய இடங்கள்	: எரிகோ, ஏதோம் வனாந்திரம், சூனேம், கில்கால், தோத்தான், சமாரியா, தமஸ்கு, எருசலேம்.
நூலின் தன்மை	: வரலாற்று நூல்

நூலின் உள்ளடக்கம் : தீர்க்கதரிசி எலிசா, யூதா–இஸ்ரயேல் அரசர்கள், சமாரியாவின் வீழ்ச்சி, எசேக்கியா, யோசியாவின் ஆட்சி, யூதாவின் இறுதி அரசர்கள், எருசலேமின் வீழ்ச்சி ஆகியவை கூறப்பட்டுள்ளது.

I நாளாகமம்

பொருள்	:	குறிப்பேடு
ஆசிரியர்	:	எஸ்றா
கருப்பொருள்	:	வம்சவழிப்பட்டியல் மற்றும் வரலாறு
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 1051 – 931
எழுதப்பட்ட இடம்	:	பாலஸ்தீனம்
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 5ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	:	29
முக்கிய அதிகாரம்	:	அதி: 17. தாவீதுக்கு நாத்தானின் செய்தி
மொத்த வசனங்கள்	:	942
முக்கிய வசனம்	:	அதி: 14:2
முக்கிய நபர்கள்	:	தாவீது, சாலொமோன்.
முக்கிய இடங்கள்	:	எப்ரோன், எருசலேம், ஆலயம்.
நூலின் தன்மை	:	வரலாற்று நூல்

நூலின் உள்ளடக்கம் : வம்ச வரலாறு அட்டவணை, அரசர் சவுலின் இறப்பு, தாவீதின் ஆட்சி, எருசலேமில் தாவீதின் செயல்கள், தாவீதின் கணக்கெடுப்பு, எருசலேம் தேவாலயத்திற்கான தாவீதின் முன்னேற்பாடு, குருக்களின் பணிகள், தாவீதின் ஆணைகள் போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளது.

II நாளாகமம்

பொருள் : குறிப்பேடு

ஆசிரியர் : எஸ்றா

கருப்பொருள் : யூதாவின் மேன்மை

காலம் : கி.மு. ஏறத்தாழ 1051 – 586

எழுதப்பட்ட இடம் : பாலஸ்தீனம்

எழுதப்பட்ட ஆண்டு : கி.மு. 5ம் நூற்றாண்டு

மொத்த அதிகாரங்கள் : 36

முக்கிய அதிகாரம் : அதி: 34. சட்டநூல் கண்டுபிடிக்கப் படல்

மொத்த வசனங்கள் : 822

முக்கிய வசனம் : அதி: 7:14

முக்கிய நபர்கள் : சாலொமோன், சீபா, யோசபாத், ரெகோபெயாம், உசியா, ஆகாஸ், எசேக்கியா, மனாசே, யோசியா.

முக்கிய இடங்கள் : எருசலேம், ஆலயம்.

நூலின் தன்மை : வரலாற்று நூல்

நூலின் உள்ளடக்கம் : அரசன் சாலொமோன், எருசலேம் தேவாலயம் சாலொமோன் மூலம் கட்டப்படுதல், சாலொமோனின் மன்றாட்டு, சாலொமோனின் அரிய செயல்கள், சாலொமோனின் இறப்பு, யூதாவின் அரசர்கள், எருசலேமின் வீழ்ச்சி ஆகியவை தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

எஸ்றா

பொருள்	:	உதவி
ஆசிரியர்	:	எஸ்றா
கருப்பொருள்	:	நாடு திரும்பியவர்கள்
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 538 – 430
எழுதப்பட்ட இடம்	:	பாலஸ்தீனம்
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 5ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	:	10
முக்கிய அதிகாரம்	:	அதி:6.கோவில் அர்ப்பணிக்கப்படல்
மொத்த வசனங்கள்	:	280
முக்கிய வசனம்	:	அதி: 6:21, 22
முக்கிய நபர்கள்	:	கோரேஸ், செருபாபேல், ஆகாய், சகரியா, தரியு, அர்தசெஷ்டா, எஸ்றா.
முக்கிய இடங்கள்	:	பாபிலோன், எருசலேம்.
நூலின் தன்மை	:	வரலாற்று நூல்

நூலின் உள்ளடக்கம் : செருபாபேலின் தலைமையில் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரயேல் மக்கள், எருசலேம் தேவாலயம் திரும்ப கட்டப்படுதல்,அர்த்தக்சஸ்தா மன்னனின் ஆதரவு,எஸ்றாவின் தலைமையில் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரயேல் மக்களின் இரண்டாம் பகுதி, கோவில் பொறுப்புக்கு லேவியரை எஸ்றா நியமித்தல், கலப்புத் திருமணம் கண்டிக்கப்படுதல் போன்ற நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளது.

நெகேமியா

பொருள்	:	யேகோவா ஆறுதல் தருபவர்
ஆசிரியர்	:	நெகேமியா
கருப்பொருள்	:	எருசலேம் அலங்கம் கட்டுதல்
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 538 – 430
எழுதப்பட்ட இடம்	:	பாலஸ்தீனம்
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 5ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	:	13
முக்கிய அதிகாரம்	:	அதி: 9. மக்களின் மன்றாட்டு
மொத்த வசனங்கள்	:	406
முக்கிய வசனம்	:	அதி: 6:15, 16
முக்கிய நபர்கள்	:	நெகேமியா, எஸ்றா, சன்பல்லாத், தொபியா.
முக்கிய இடங்கள்	:	எருசலேம்
நூலின் தன்மை	:	வரலாற்று நூல்

நூலின் உள்ளடக்கம் : நெகேமியா எருசலேமுக்கு வருதல், எருசலேமின் மதில்கள் புதுப்பிக்கப்படுதல், நெகேமியாவுக்கு எதிரான சதித்திட்டங்கள், சிறையிலிருந்து திரும்பியோர் பட்டியல், சட்டம் மக்கள் முன் வாசிக்கப்படுதல், கூடாரத் திருவிழா, மக்களின் மன்றாட்டு, ஒப்பந்தத்தில் மக்கள் கையொப்பமிடல், குருக்கள் மற்றும் லேவியர் பட்டியல், வேற்றினத்தார் விலக்கப்படல், நெகேமியாவின் பிற செயல்கள் ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளது.

எஸ்தர்

பொருள்	:	நட்சத்திரம்
ஆசிரியர்	:	மொர்தெகாய்
கருப்பொருள்	:	கடவுளின் பாதுகாப்பு
காலம்	:	கி.மு. 538 – 430
எழுதப்பட்ட இடம்	:	பெர்சியா
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 5ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	:	10
முக்கிய அதிகாரம்	:	அதி: 8. தம்மைக் காத்துக் கொள்ளும்படி எஸ்தர் யூதரைத் தூண்டல்
மொத்த வசனங்கள்	:	167
முக்கிய வசனம்	:	அதி: 4:14
முக்கிய நபர்கள்	:	எஸ்தர், மொர்தெகாய், ஆகாஸ்வேரு, ஆமான்.
முக்கிய இடங்கள்	:	சூசான் அரண்மனை, பெர்சியா.
நூலின் தன்மை	:	வரலாற்று நூல்

நூலின் உள்ளடக்கம் : ஆகாஸ்வேருவின் அரசாட்சி, அரசி வஸ்தி மன்னர் ஆகாஸ்வேருவை அவமதித்தல், எஸ்தர் அரசி ஆதல், ஆமானின் சதிகள், எஸ்தரின் விருந்து உபசரிப்பு, ஆமான் கொல்லப்படல், மொர்தெகாய் உயர் பதவி பெறுதல், யூதர் தம் எதிரிகளை அழித்தல், பூரிம் பெருவிழா போன்றவை கூறப்பட்டுள்ளது.

யோபு

பொருள்	:	துன்பப்பட்டவர்
ஆசிரியர்	:	யோபு
கருப்பொருள்	:	துன்பப்படுதலின் புதிர்
காலம்	:	அறியப்படவில்லை
எழுதப்பட்ட இடம்	:	ஊத்ஸ்
எழுதப்பட்ட ஆண்டு	:	அறியப்படவில்லை
மொத்த அதிகாரங்கள்	:	42
முக்கிய அதிகாரம்	:	அதி: 42. யோபு செல்வச் சிறப்புக்களை மீண்டும் பெறுதல்
மொத்த வசனங்கள்	:	1070
முக்கிய வசனம்	:	அதி: 2:3
முக்கிய நபர்கள்	:	யோபு, எலிப்பாஸ், பில்தாத், சோப்பார், எலிகூ.
முக்கிய இடங்கள்	:	ஊத்ஸ் தேசம்
நூலின் தன்மை	:	கவிதை நூல்

நூலின் உள்ளடக்கம் : யோபுவின் குடும்பம், யோபுவை சாத்தான் சோதித்தல், நண்பர்களின் உரையாடல், யோபுவின் பதிலுரை, எலிகூவின் உரைகள், யோபுவுக்கு ஆண்டவரின் பதில், யோபு இரட்டத்தனையாக ஆசீர்வாதம் பெறுதல் போன்றவை தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

சங்கீதம்

பொருள்	:	திருப்பாடல்
ஆசிரியர்	:	தாவீது, ஆசாப், கோராவின் மக்கள், ஏமான், ஏத்தான், மோசே
கருப்பொருள்	:	புகழ்தல், போற்றுதல்
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 1051 – 931
எழுதப்பட்ட இடம்	:	பாலஸ்தீனம், பாபிலோன்
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 10ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	:	150
முக்கிய அதிகாரம்	:	அதி: 100. புகழ்ச்சிப் பாடல்
மொத்த வசனங்கள்	:	2461
முக்கிய வசனம்	:	அதி: 150:6
முக்கிய நபர்கள்	:	தாவீது
முக்கிய இடங்கள்	:	எருசலேம் தேவாலயம்
நூலின் தன்மை	:	கவிதை நூல்

நூலின் உள்ளடக்கம் : வேதாகமத்தில் உள்ள இப்பாடல்கள் பக்திப் பாடல்கள் மற்றும் இறை மன்றாட்டுகள் ஆகியவற்றின் தொகுப்பு ஆகும். இவை, கடவுளைப் புகழ்ந்து பாடும் பாடல்கள், உதவி, பாதுகாப்பு, மீட்பு வேண்டி பாடும் பாடல்கள், மன்னிப்பு வேண்டும் பாடல்கள், நன்றி செலுத்தும் பாடல்கள், அரசர் பற்றிய பாடல்கள், அறிவுரை அளிக்கும் பாடல்கள் என பலவகைப் படுகின்றன.

நீதிமொழிகள்

பொருள்	:	நீதிமொழிகள்
ஆசிரியர்	:	சாலொமோன்
கருப்பொருள்	:	ஞானம்
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 1051 – 931
எழுதப்பட்ட இடம்	:	பாலஸ்தீனம்
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 10ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	:	31
முக்கிய அதிகாரம்	:	அதி: 31. நல்ல மனையாள்
மொத்த வசனங்கள்	:	915
முக்கிய வசனம்	:	அதி: 1:7.
முக்கிய நபர்கள்	:	சாலொமோன்
முக்கிய இடங்கள்	:	எருசலேம்
நூலின் தன்மை	:	கவிதை நூல்

நூலின் உள்ளடக்கம் : சாலொமோனின் ஞானம் பற்றிய புகழுரை, நீதிமொழிகள், ஆகூரின் மொழிகள், பல்வேறு சொற்கோவைகள் இதில் அடங்கியுள்ளன.

பிரசங்கி

பொருள்	:	சபை உரையாளர்
ஆசிரியர்	:	சாலொமோன்
கருப்பொருள்	:	மனிதனுடைய காரணங்கள்
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 1051 – 931
எழுதப்பட்ட இடம்	:	பாலஸ்தீனம்
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 10ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	:	12
முக்கிய அதிகாரம்	:	அதி: 12. இளையோருக்கு அறிவுரை
மொத்த வசனங்கள்	:	222
முக்கிய வசனம்	:	அதி: 12:13
முக்கிய நபர்கள்	:	சாலொமோன்
முக்கிய இடங்கள்	:	எருசலேம்
நூலின் தன்மை	:	கவிதை நூல்

நூலின் உள்ளடக்கம் : இந்நூல் சாலொமோன் ஞானியின் சிந்தனைகளைக் கொண்டது. மானிட வாழ்வு எவ்வளவு குறுகியது, முரண்பாடானது என்று எடுத்துக் காட்டுகிறார். வாழ்க்கையே வீண் என்று கூறும் இவரின் அனுபவ நூல் இது.

உன்னதப்பாட்டு

பொருள்	:	இனிமைமிகு பாடல்
ஆசிரியர்	:	சாலொமோன்
கருப்பொருள்	:	அன்பிற்குரியவர்
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 1051 – 931
எழுதப்பட்ட இடம்	:	பாலஸ்தீனம்
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 10ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	:	8
முக்கிய அதிகாரம்	:	அதி: 1 – 8. தலைவன் தலைவி உரையாடல்
மொத்த வசனங்கள்	:	117
முக்கிய வசனம்	:	அதி: 6:3
முக்கிய நபர்கள்	:	சாலொமோன், சூலேமித்தியாள், எருசலேமின் வாலிபர்.
முக்கிய இடங்கள்	:	எருசலேம்
நூலின் தன்மை	:	கவிதை நூல்

நூலின் உள்ளடக்கம் : இந்நூல் காதற் கவிதைகளின் தொகுப்பு ஆகும். தலைவன் தலைவி உரையாடல் போன்று அமைந்துள்ளது. ஆண்–பெண் இருவருக்கும் இடையில் ஏற்படும் காதல் உணர்வை பிரதிபலிப்பதாய் இந்நூல் அமைகின்றது.

ஏசாயா

பொருள்	: கடவுளின் வெகுமதி
ஆசிரியர்	: ஏசாயா
கருப்பொருள்	: இஸ்ரவேலின் மேசியா
காலம்	: கி.மு. ஏறத்தாழ 931 – 586
எழுதப்பட்ட இடம்	: பாலஸ்தீனம்
எழுதப்பட்ட ஆண்டு	: கி.மு. 8ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	: 66
முக்கிய அதிகாரம்	: அதி: 53. துன்புறும் ஊழியர்
மொத்த வசனங்கள்	: 1292
முக்கிய வசனம்	: அதி: 53:5
முக்கிய நபர்கள்	: ஏசாயா, உசியா, ஆகாசு, ஏசாயாவின் மகன், எசேக்கியா, கோரேஸ்
முக்கிய இடங்கள்	: யூதா, எருசலேம், அசீரியா, ஏதோம், பாபிலோன்
நூலின் தன்மை	: தீர்க்கதரிசன நூல்

நூலின் உள்ளடக்கம் : கடவுளின் எச்சரிக்கைகளும் வாக்குறுதிகளும், வேற்றினத்தார்க்குரிய தண்டனைகள், உலகின்மீது ஆண்டவரின் தண்டனைத் தீர்ப்பு, யூதாவின் அரசன் எசேக்கியா வரலாறு, ஆண்டவரின் வாக்குறுதியும் நம்பிக்கை உரைகளும், நியாயத்தீர்ப்பு ஆகியவை கூறப்பட்டுள்ளது.

எரேமியா

பொருள்	:	கடவுளின் மேன்மை
ஆசிரியர்	:	எரேமியா
கருப்பொருள்	:	உடன்படிக்கை
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 931 – 586
எழுதப்பட்ட இடம்	:	பாலஸ்தீனம்
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 7ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	:	52
முக்கிய அதிகாரம்	:	அதி: 31. புதிய உடன்படிக்கை
மொத்த வசனங்கள்	:	1364
முக்கிய வசனம்	:	அதி: 2:19
முக்கிய நபர்கள்	:	யூதாவின் அரசர்கள், பாரூக், நேபுகாத்நேச்சார், பஸ்கூர்
முக்கிய இடங்கள்	:	எருசலேம், ராமா, எகிப்து, மோவாப்
நூலின் தன்மை	:	தீர்க்கதரிசன நூல்

நூலின் உள்ளடக்கம் : எரேமியாவின் அழைப்பு, யூதா எருசலேமுக்கு எதிரான இறைவாக்குகள், நல்வாழ்வு பற்றிய தீர்க்கதரிசனங்கள், எரேமியாவின் துன்பங்கள், பிற இனங்களுக்கு எதிரான இறைவாக்குகள், எருசலேமின் வீழ்ச்சி போன்றவை கூறப்பட்டுள்ளது.

புலம்பல்

பொருள்	: புலம்பல்
ஆசிரியர்	: எரேமியா
கருப்பொருள்	: எருசலேமுக்காக புலம்புதல்
காலம்	: கி.மு. ஏறத்தாழ 931 – 586
எழுதப்பட்ட இடம்	: பாலஸ்தீனம்
எழுதப்பட்ட ஆண்டு	: கி.மு. 6ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	: 5
முக்கிய அதிகாரம்	: அதி: 3. தண்டனைத் தீர்ப்பும், நம்பிக்கையும்
மொத்த வசனங்கள்	: 154
முக்கிய வசனம்	: அதி: 2:11
முக்கிய நபர்கள்	: எரேமியா, எருசலேமின் மக்கள்.
முக்கிய இடங்கள்	: எருசலேம்
நூலின் தன்மை	: தீர்க்கதரிசன நூல்

நூலின் உள்ளடக்கம் : எருசலேமின் துன்பங்கள், எருசலேமுக்குரிய தண்டனை, தண்டனைத் தீர்ப்பும் நம்பிக்கையும், வீழ்ச்சியுற்ற எருசலேம், இறைவனின் இரக்கத்திற்காக எரேமியாவின் வேண்டல் போன்றவை இடம் பெற்றுள்ளன.

எசேக்கியேல்

பொருள் : கடவுளின் பெலன்

ஆசிரியர் : எசேக்கியேல்

கருப்பொருள் : நியாயத்தீர்ப்பு மற்றும் மகிமை

காலம் : கி.மு. ஏறத்தாழ 605 – 535

எழுதப்பட்ட இடம் : பாபிலோன்

எழுதப்பட்ட ஆண்டு : கி.மு. 6ம் நூற்றாண்டு

மொத்த அதிகாரங்கள் : 48

முக்கிய அதிகாரம் : அதி: 37. உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு

மொத்த வசனங்கள் : 1273

முக்கிய வசனம் : அதி: 36:24 – 26

முக்கிய நபர்கள் : எசேக்கியேல், எசேக்கியேல் மனைவி, நேபுகாத்நேச்சார், இஸ்ரவேலின் தலைவர்கள்.

முக்கிய இடங்கள் : எருசலேம், பாபிலோன், எகிப்து

நூலின் தன்மை : தீர்க்கதரிசன நூல்

நூலின் உள்ளடக்கம் : எசேக்கியேலின் . அழைப்பு, எருசலேம் பற்றிய அழிவுச் செய்திகள், மக்களினங்களுக்கு எதிரான கடவுளின் நீதித் தீர்ப்புகள், கடவுள் தம் மக்களுக்கு அளித்த வாக்குறுதி, கோகுக்கு எதிரான தீர்க்கதரிசனம், வருங்கால கோவில் மற்றும் நாடு பற்றிய காட்சிகள் அடங்கியுள்ளன.

தானியேல்

பொருள்	:	கடவுளின் தீர்ப்பு
ஆசிரியர்	:	தானியேல்
கருப்பொருள்	:	அரசுகளின் எழுச்சியும், வீழ்ச்சியும்
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 605 – 535
எழுதப்பட்ட இடம்	:	பாபிலோன், சூசான்
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 6ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	:	12
முக்கிய அதிகாரம்	:	அதி: 9. எழுபது வாரங்கள்
மொத்த வசனங்கள்	:	357
முக்கிய வசனம்	:	அதி: 2:22
முக்கிய நபர்கள்	:	தானியேல், நேபுகாத்நேச்சார், சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ, பெல்ஷெத்ஷார், தரியு.
முக்கிய இடங்கள்	:	நேபுகாத்நேச்சார் அரண்மனை, அக்கினி சூளை, பெல்ஷாத்ஷார்–சிலை நாட்டப்பட்ட இடம், சிங்கக் கெபி.
நூலின் தன்மை	:	தீர்க்கதரிசன நூல்

நூலின் உள்ளடக்கம் : சிறைக் கைதியாக தானியேலும் தோழர்களும், தோழர்களின் உறுதியான நம்பிக்கை, அரசனின் கனவுகளுக்கு தானியேலின்விளக்கம், தானியேலின் விசுவாசம், தானியேலுக்கு காட்சிகள், இறுதி காலம் பற்றிய செய்திகள் போன்றவை கூறப்பட்டுள்ளது.

ஓசியா

பொருள்	:	யெகோவாவே இரட்சகர்
ஆசிரியர்	:	ஓசியா
கருப்பொருள்	:	மீட்கப்படுகிற அன்பு
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 931 – 586
எழுதப்பட்ட இடம்	:	பாலஸ்தீனா
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 8ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	:	14
முக்கிய அதிகாரம்	:	அதி: 4. இஸ்ரயேலுக்கு எதிரான குற்றச்சாட்டு
மொத்த வசனங்கள்	:	197
முக்கிய வசனம்	:	அதி: 3:1
முக்கிய நபர்கள்	:	ஓசியா, கோமர் – பிள்ளைகள்
முக்கிய இடங்கள்	:	இஸ்ரயேல் வடக்கு பகுதி, சமாரியா, எப்ராயீம்.
நூலின் தன்மை	:	தீர்க்கதரிசன நூல்

நூலின் உள்ளடக்கம் : ஓசியாவின் திருமணமும் குடும்ப வாழ்வும், இஸ்ரயேலின் குற்றங்களும் அவற்றுக்குரிய தண்டனைத் தீர்ப்பும், மனமாற்றத்திற்கு அழைப்பும் வாக்குறுதியும் போன்றவை தெளிவாக கூறப்பட்டுள்ளது.

யோவேல்

பொருள் : தேவாதி தேவன்

ஆசிரியர் : யோவேல்

கருப்பொருள் : கடவுளின் நாள்

காலம் : கி.மு. ஏறத்தாழ 931 – 586

எழுதப்பட்ட இடம் : பாலஸ்தீனம்

எழுதப்பட்ட ஆண்டு : கி.மு. 9ம் (அ) 8ம் நூற்றாண்டு

மொத்த அதிகாரங்கள் : 3

முக்கிய அதிகாரம் : அதி: 2. மனமாற்றத்திற்கு அழைப்பு

மொத்த வசனங்கள் : 73

முக்கிய வசனம் : அதி: 2:12, 13

முக்கிய நபர்கள் : யோவேல், யூதாவின் மக்கள்.

முக்கிய இடங்கள் : எருசலேம்.

நூலின் தன்மை : தீர்க்கதரிசன நூல்

நூலின் உள்ளடக்கம் : வெட்டுக்கிளிகள் ஆண்டவரின் நாளுக்கு முன் அறிவிப்பு, மீட்பைப் பற்றிய வாக்குறுதி, ஆண்டவரின் நாள் போன்றவை விளக்கப்பட்டுள்ளது.

ஆமோஸ்

பொருள்	:	பாரம், சுமை
ஆசிரியர்	:	ஆமோஸ்
கருப்பொருள்	:	நீதி நியாயம்
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 931 – 586
எழுதப்பட்ட இடம்	:	பாலஸ்தீனம்
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 8ம் நூற்றாண்டு
மொத்த அதிகாரங்கள்	:	9
முக்கிய அதிகாரம்	:	அதி: 9. ஆண்டவரின் தீர்ப்புகள்
மொத்த வசனங்கள்	:	146
முக்கிய வசனம்	:	அதி: 5:24
முக்கிய நபர்கள்	:	ஆமோஸ், அமத்சியா
முக்கிய இடங்கள்	:	பெத்தேல், சமாரியா.
நூலின் தன்மை	:	தீர்க்கதரிசன நூல்

நூலின் உள்ளடக்கம் : வேற்றினத்தார் மீது ஆண்டவரின் தீர்ப்பு, இஸ்ரயேல் மீது ஆண்டவரின் தீர்ப்பு, ஆமோசுக்கு காட்டப்பட்ட ஐந்து காட்சிகள், ஆண்டவரின் தீர்ப்பு போன்றவை கூறப்பட்டுள்ளது.

ஒபதியா

பொருள் : கடவுளின் பணியாள்

ஆசிரியர் : ஒபதியா

கருப்பொருள் : ஏதோமின் அழிவு

காலம் : கி.மு. ஏறத்தாழ 931 – 586

எழுதப்பட்ட இடம் : பாலஸ்தீனம்

எழுதப்பட்ட ஆண்டு : கி.மு. 6ம் நூற்றாண்டு

மொத்த அதிகாரங்கள் : 1

முக்கிய அதிகாரம் : –

மொத்த வசனங்கள் : 21

முக்கிய வசனம் : அதி: 1:15

முக்கிய நபர்கள் : ஏதோமியர்

முக்கிய இடங்கள் : ஏதோம், எருசலேம்

நூலின் தன்மை : தீர்க்கதரிசன நூல்

நூலின் உள்ளடக்கம் : ஏதோமிற்கு வரும் தண்டனைத் தீர்ப்பு, ஆண்டவரின் நாள் போன்ற செய்திகள் இடம் பெற்றுள்ளன.

யோனா

பொருள்	:	புறா
ஆசிரியர்	:	யோனா
கருப்பொருள்	:	கடவுளின் கருணை
காலம்	:	கி.மு. ஏறத்தாழ 931 – 586
எழுதப்பட்ட இடம்	:	பாலஸ்தீனம்
எழுதப்பட்ட ஆண்டு	:	கி.மு. 8ம் நூற்றாண்டு
